செ.வெ.எண்: 53 நாள்: 24.12.2020

**விழுப்புரம் மாவட்டம் வானூர், விக்கிரவாண்டி மற்றும் விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்கு எண்ணும் மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டம் வானூர், விக்கிரவாண்டி மற்றும் விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்கு எண்ணும் மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.12.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையங்களான வானூர் அரவிந்தர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம் இ.எஸ்.பொறியியல் கல்லூரி, விழுப்புரம் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது வாக்கு எண்ணும் மையத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, கணினி அறை, தேர்தல் பார்வையாளர் அறை, தேர்தல் நடத்தும் அலுவலரின் அறை, இணையதள மற்றும் கணினி வசதியுடன் கூடிய செய்தியாளர் ஊடக மைய அறை மற்றும் மருத்துவக்குழுவினருடன் மருத்துவ அறை உள்ளிட்ட வசதிகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் முழுமையாக ஏற்படுத்தி தர வேண்டும் எனவும், மேலும் அனைத்து அறைகளிலும் **CCTV Camera** பொருத்தப்பட்டு கண்காணிப்பு வசதிகள் ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.நல்லசிவம், வட்டாட்சியர்கள் திரு.சங்கரலிங்கம் (வானூர்), திரு.வெங்கடசுப்பிரமணி (விழுப்புரம்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.